# வாவு வஜீஹா வனிதையர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி

## காயல்பட்டணம்

### <u>சமத்துவப் பொங்கல் விழா 12.01.2019</u>

காயல்பட்டணம், வாவு வஜீஹா வனிதையர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் தமிழர் திருநாளாம் பொங்கல் விழாவை முன்னிட்டு சமத்துவப் பொங்கல் விழா 12.01.2019 சனிக்கிழமை அன்று மதியம் 2 மணியளவில் கல்லூரி வளாகத்தில் கல்லூரி நிறுவனர் தலைவர் அல்ஹாஜ் வாவு S. செய்யது அப்துர் ரஹ்மான் தலைமையில் கொண்டாடப்பட்டது.

கல்லூரிச் செயலர் வாவு M.M.மொகுதஸீம் B.A(CS), துணைச்செயலர் ஹாஜி ஹாபிஸ் வாவு S.A.R.அஹ்மது இஸ்ஹாக் ஆலிம் M.A., Azhari (Egypt), கல்லூரி நிர்வாக உறுப்பினர்கள், கல்லூரி முதல்வர் முனைவர் திருமதி R. C.வாசுகி M.A., Ph.D., DGT, இயக்குநர் முனைவர் திருமதி மெர்சி ஹென்றி M.A.,Ph.D, உதவிப்பேராசிரியர்கள், அலுவலகப் பணியாளர்கள், கல்லூரி மாணவியர் அனைவரும் உற்சாகமாகப் பங்கேற்றனர். கல்லூரி மாணவியர் சமத்துவத்தை உறுதிப்படுத்தும் வகையில் ஆடிப்பாடிப் பொங்கலிட்டு மகிழ்ந்தனர்.